நாநா சீவ வாதக் கட்டளை

மூலம்.

வெளியீடு:
ஸ்ரீ. குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்,
திருவாரூர்.

முதல் பதிப்பு.
1982.

உ

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச்செய்த

நாநா சீவ வாதக் கட்டளை

மூலம்.

திருவாரூர்
ஸ்ரீ. குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்,
ஸ்ரீ. சித. சிவானந்த சுவாமிகள் இயற்றிய
வியாக்கியான நூலின் படியான நிருபகப் பிரிவு
எண்கள், நூல்பிரிவு எண்களுடன் கூடியது.

வெளியீடு:
ஸ்ரீ. குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்.
திருவாரூர்.

முதல் பதிப்பு
1982.

 [விலை ரூ. 2—00

முதல் பதிப்பு — 1982.

வெளியீடு:

ஸ்ரீ. குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்.

வன்மீகபுரம் என்னும் மடப்புரம்,

திருவாரூர். Pin. 610 002.

தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.

அச்சிட்டோர்:

மதராஸ் ரிப்பன் பிரஸ்,

புதுக்கோட்டை.

உ

ஸ்ரீ சேஷாத்திரி சிவனூர் அருளிய

நாநா சீவ வாதக் கட்டளை மூலம்.

சிறப்புப் பாயிரம்

இப்பியி னிடையே எழும்இர சதம்போல்
என்றுமாய் இலகிஇன் பாகி,
ஒப்பிட ஏதும் இன்றிய பிரமத்து
உற்றிடும் பகுதிமுன் னுய,
அப்பிர பஞ்ச முறைமையைத் தூல
அருந்ததி நியாயமே என்னச்,
செப்பினன் யாரும் தெளிவுறச் சேஷாத்
திரிசிவன் என்னுமா தவனே.

தெய்வ வணக்கம்.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

திருவாரூர், ஸ்ரீ குரு தக்ஷிணு மூர்த்தி சுவாமிகள் மடம் ஸ்ரீ சிவானந்த சுவாமிகள் உரை நூலின் படியான நிரூபக எண், பெயர் விபரமும், நூல் பிரிவு எண் விபரமும்.

நிரூபக எண்	நிரூபகப் பெயர்	நூல்பிரிவு எண்
1	பிரஹ்ம விலக்கண நிரூபகம்	1. முதல் -4. வரை
2	அத்தியாரோப நிரூபகம்	5. " -20. "
3	திதி நிரூபகம்	21. " -29. "
4	அபவாத நிரூபகம்	30. " -35. "
5	தத்துவ விவேசன நிரூபகம்	36. " -46. "
6	சீவன் முத்தி நிரூபகம்	47.

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிய

நாநா சீவ வாதக் கட்டளை மூலம்.

(மேற்படி மூல நூலிற்கு, திருவாரூர்,
ஸ்ரீ குரு - தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடம்
இரண்டாம் மடாதிபதி
ஸ்ரீ சிவானந்த சுவாமிகள் இயற்றிய உரை நூலின்
படியான, நிருபக எண், நூல் பிரிவு எண்களுடன் கூடியது.)

நிருபக எண்.	நூல் பிரிவு எண்.	நூல்
1	1	சுத்தப் பிரஹ்மமாய் இருக்கின்ற சருவ சாக்ஷியினிடத்திலே, அக்கினியிற் சூடு போல அபிந்நமாக ஒரு சத்தியுண்டு. அந்தச் சத்தி அவ்வதீதப் பிரஹ்மத்தில் அடங்கியிருக்கும் போது, அதற்குச் சுத்தப் பிரஹ்மம் என்று பெயர்.
,,	2	அந்தச் சத்தி விசிரிம்பித்துச் சுத்தப் பிரஹ்மத்தை வியாபிக்கும் போது, அப்பிரஹ்மம் பரை வியாபகத்திற்குள் இருந்தபடியால், அதற்குப் பரப் பிரஹ்மம் என்று பெயராம்.
,,	3	இலக்ஷண சூநியமாய் இருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரஹ்ம சந்நிதானத்தில் புருட சமூகத்தில் ஸ்திரீக்கு இன்பம் சநித்தாற் போல, அவிகிருத சத்துவ ரஜஸ் தமோ குணங்கள் உண்டாயின. இவற்றுள் சுத்த சத்துவத்துக்கு ஆநந்த ரூப சத்தி யென்றும்,

நிருபக எண	நூல் பிரிவு எண்	நூல்
1	3	சுத்த ரஜஸிற்குச் சித்து ரூப சத்தி யென்றும், சுத்த தமஸிற்குச் சத்து ரூப சத்தி யென்றும் பெயர்.
,,	4	இவற்றில் காரணமான ஆநந்த ரூப சத்தியுடனே பரப் பிர்ஹ்மம் கூடி சர்வாநந்தம் என்னும் சுழுத்தியவத்தையை அடையும் போது பரப் பிரஹ்மம் என்னும் பெயர் போய்ப் பரமாநந்தர் என்னும் பெயர் வந்தது. இந்தப் பரமாநந்தர் சித்து ரூப சத்தியுடனே கூடிச் சர்வப் பிரகாச மென்னும் சொப்பனுவத்தையை அடையும் போது, பரமாநந்தர் என்னும் பெயர் போய்த் தேஜோ மயர் என்னும் பெயர் வந்தது. இந்தத் தேஜோ மயர் சத்து ரூப சத்தியுடனே கூடிச் சர்வ வியாபகம் என்னும் சாக்கிராவத்தையைஅடையும் போது, தேஜோமயர் என்னும் பெயர் போய்ப் பரிபூரணர் என்னும் பெயர் வந்தது.
2	5	இந்த அகண்ட பரிபூரண சச்சிதாநந்தப் பிரஹ்மத்தில், சுத்தியில் இரசதம் போல, மூலப்பிரகிருதி யென்னும் ஒரு சத்தியுண்டு. அந்தச் சத்தி விகிருத சத்துவ இராசத தாமதமாகிய முக்குண சொருபமாக விரிந்து தோன்றும்.

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	6	அம்முக்குணங்களில் சத்துவ குணம் மாயை யென்றும், சருவஞ்ஞு வுபாதி யென்றும், ஈசுவர காரண சரீர மென்றும் சொல்லப்படும். அம்மாயை யில் நின்மல சலப் பிரதிபிம்பம் போலப், பிரஹ்மப் பிரதி பிம்பம் சுல க்ஷணமாகவுளது. அந்தப் பிரதிபிம்ப சைதந்நியம் சருவஞ்ஞனாகிய ஈசுவர னென்று சொல்லப்படும்.
,,	7	அச்சத்துவ குணமாயை, சத்துவத் தில் சத்துவம், சத்துவத்தில் இராசதம், சத்துவத்திற் றாமதம் என்னும் முக்குண சொரூபமாய் இருக்கும். அவற்றுள், சத்துவத்தில் சத்துவம் பிரதாநமாகும் போது, அதிற் பிரதிவிம்பமாயுள்ள ஈசுவரன், சகத்தை யிரட்சிக்கின்ற மையால் விஷ்ணு வென்றும், சத்துவத் தில் இராசதம் பிரதாநமாகும்போது, அதிற் பிரதிவிம்பமாயுள்ள ஈசுவரன் சகத்தைச் சிருஷ்டிக்கின்றமையால் பிரஹ்மா என்றும், சத்துவத்திற் றாமதம் பிரதாந மாகும் போது, அதிற் பிரதிவிம்பமாயுள்ள ஈசுவரன், சகத்தை யுபசம்மாரஞ் செய்கின்றமையால் உருத்திரனென்றும் சொல்லப்படுவன். இங்ஙனம் சத்துவ குண கற்பனை கூறப் பட்டது.

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	8	இராசத குணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து, அவித்தைக ளென்றும், சீவ காரண சரீரங்க ளென்றும் சொல்லப் படுவனவாய், ஒன்றற்கொன்று தார தம்மிய முள்ளவைகளாய் இருக்கும். இவ்வவித்தை களிடத்திலும் மலிந சலப் பிரதிவிம்பம் போலப், பிரஹ்மப் பிரதிவிம்பங்களுளவாம். இப்பிரதி விம்ப சைதந்நியங்கள், கிஞ்சிஞ்ஞ ரென்றும் சிதாபாச சீவ ரென்றும் பிராஞ்ஞரென்றும் சொல்லப்படும்.
,,	9	இவ்வவித்தைகளும் இராசதத்தில் சாத்துவீகம், இராசதத்தில் இராசதம், இராசதத்தில் தாமதம் என்னும் முக்குண சொரூபங்களாக வுள்ளன. இவற்றுள், இராசதத்தில் சாத்துவீகம் பிரதாநமாகும் போது. அதில் பிரதி விம்பமாயுள்ள சிதாபாசன், தத்துவ ஞான நிஷ்டனவன். இராசதத்தில் இராசதம் பிரதாநமாகும் போது, அதில் பிரதிவிம்பமாயுள்ளசிதாபாசன், காமக் குரோத பரனாய்க் கன்ம நிஷ்ட னவன். இராசதத்தில் தாமதம் பிரதாந மாகும் போது, அதில் பிரதிவிம்பமா யுள்ள சிதாபாசன், சோம்பல் நித்திரை மயக்கங்கள் உடையவனவன். இங்ஙனம், இராசத குண கற்பனை சொல்லப்பட்டது.

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	10	தாமத குணமானது, ஆவரணம், விக்ஷேப மென இரண்டு சத்திகளாகத் தோன்றும். இவ்விரண்டில் ஆவரண சத்தியானது, தத்துவ ஞானியும், ஈசுவரனும் தவிர, மற்றைச் சீவர்கட் கெல்லாம் சரீரத் திரயம் சிதாபாசன் சாக்ஷி சைதந்நியம் என்னுமிவைகளுள் ஒன்றற் கொன்றுள்ள பேதந் தெரிய வொட்டாமல் மறைக்கும். இதனால் மறைப்பை யுடைய சீவர்கள் (29) தத்துவங்களையும், ஒருமைப் பாடாக நானென் றபிமாநிப்பர். இந்த அபிமாநமே அகங்காரக் கிரந்தி யென்றும், சம்சார பந்த மென்றும் சொல்லப் படும். சற்குரு கடாக்ஷத்தால் இவ் வாவரணம் நீங்கி (29) தத்துவங்களில் ஒன்றற் கொன்றுள்ள பேதந் தெரிகிறதே முத்தி. இப்படி ஆவரண சத்தியின் காரியம் சொல்லப் பட்டது.
,,	11	இனி விக்ஷேப சத்தியினின்றும் சத்த தந்மாத்திரையான ஆகாயந் தோன்றிற்று. அதினின்றும் பரிச தந்மாத்திரையான வாயுவும், அதினின்றும் ரூப தந் மாத்திரையான அக்கினியும், அதினின்றும் ரச தந்மாத்திரையான அப்புவும், அதினின்றும் கந்த தந்மாத்திரையான பிருதிவியுந் தோன்றின. இவ் வைந்து பூதங்கட்கும் காரணமான விக்ஷேப

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	11	சத்தியில், தமஸில் சத்துவம், தமஸில் இராஜஸம் தமஸில் தமஸு என்னுமிவைகள் அற்பங் கருவாக இருந்தமையால், அதன் காரியமாகிய ஐந்து பூதங்களும் முக்குணங்களுடனே தோன்றின. இப் பூதங்கட்குத் தந்மாத்திரைகளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும், முக்குண பூதங்களென்றும், சூக்ஷ்ம பூதங்களென்றும் பெயர் சொல்லப் படும்.
,,	12	சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்களும் தூல பூதங்களும் தோன்றின. எங்ஙன மெனின், ஆகாயமாதிய ஐந்து பூதங்களின் சாத்வீகாம்ஸத்தில் பூதத்துக் கொவ்வொரு மாத்திரை யெடுத்து ஒன்ருகக் கூட்டி வைக்கப்பட்டது அந்தக் கரண மென்று சொல்லப் படும். இவ்வந்தக் கரணத்தில், ஆகாயத்தினம்ஸம் கூடியதற் கடையாளம், அந்தக் கரணமும் ஆகாயத்தைப் போல, சகலமான கேள்விகளுக்கும் இடங் கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற விருத்திக்கு உள்ளம் என்று பெயர். வாயுவி னம்ஸம் கூடியதற் கடையாளம், அந்தக் கரணமும் வாயுவைப் போல அலைகின்றது. இப்படி அலைகின்ற விருத்திக்கு மநமென்று பெயர். அக்கிநியின் அம்ஸங்

நிரூபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	12	கூடியதற் கடையாளம் அந்தக் கரணமும் அக்கிநியைப் போல, ஈதின்ன தென்று விளக்கு விக்கின்றது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தி என்று பெயர். அப்புவின் அம்ஸங் கூடியதற் கடையாளம் அந்தக் கரணமும் அப்புவைப் போல விடயங் களைப் பற்றி யிழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர். பிருதிவியி னம்ஸங் கூடியதற் கடையாளம், அந்தக் கரணமும் பிருதிவியைப் போல கடினமாக நின்று நானென்றபிமாநிக்கின்றது. இப்படி அபிமாநிக்கின்ற விருத்திக்கு அகங்காரம் என்று பெயர்.
,,	13	பின்னும் ஆகாய மாதிய பஞ்ச பூதங்களின் சாத்வீ காம்சத்திலே பூதத்திற் கொவ்வொரு மாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைக்கப் பட்டது சுரோத்திராதி ஞானேந்தியரி ங்களென்றுசொல்லப்படும். இவைகளில் சுரோத்திரம் ஆகாசத்தின் அம்ஸமான படியால், ஆகாசத்தின் குணமான சத்தத்தை மாத்திரமறியும். துவக்கு வாயுவினம்ஸமான படியால், வாயுவின் குணமான பரிசத்தை மாத்திரம் அறியும். சட்சு அக்கினியின் அம்ஸமான படியால், அக்கிநியின் குணமான ரூபத்தை மாத்திரம்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	13	அறியும். சிங்குவை அப்புவின் அம்ஸமான படியால் அப்புவின் குணமான இரசத்தை மாத்திரம் அறியும். ஆக்கிராணம் பிருதிவியின் அம்ஸமான படியால் பிருதிவியின் குணமான கந்தத்தை மாத்திரம் அறியும். இப்படி ஐந்தும் ஒன்ருேடொன்று கூடாத படியால், ஒன்று மற்ருென்றின் குணத்தைக் கிரகிக்க அறியாது, அந்தக் கரணம் ஐந்தும் ஒன்ருகக் கூடிய தானமையால், ஐந்திந்திரியங்களினுலும் ஐந்து விடயங்களையும் அறியும். அந்தக் கரணம் (5) ஞாநேந் திரியம் (5) ஆகிய பத்தும் சத்துவாம்சம் ஆனபடியால் ஞான சாதன மாயின.
,,	14	பின்னும், ஆகாய மாதிய ஐந்து பூதங்களின் இராஜதாம்சங்களில், பூதத்துக் கோரொரு மாத்திரை யெடுத்து ஒன்ருகக் கூட்டி வைக்கப் பட்டவை வியாநாதி பஞ்ச வாயுக் களாம். இவைகளில் வியாந வாயு, ஆகாயத்தின் அம்சமான படியால் ஆகாயத்தைப் போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும் பிராண வாயு வாயுவின் அம்சமான படியால் வாயுவைப் போல, இருதயத்திலிருந்து நாசிகாதி பரியந்தம் அலையும். அபாந வாயு, அக்கினியின் அம்சமான படியால்,

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	14	அக்கினியைப் போல, சாடராக்கினியாக உஷ்ணித்துக் கொண்டு, குதத்தைப் பற்றி நின்று உண்ட அந்ந பாநாதிகளைச் சீரணிப்பிக்கும். சமாந வாயு, அப்புவின் அம்சமான படியால், சரீர நடுவான நாபீ ஸ்தாநத்தினின்று, உண்ட அந்ந ரசங்களை அப்புவைப் போல இழுக்கும். உதாந வாயு, பிருதிவியின் அம்சமான படியால், கண்டத்தைப் பற்றிப் பிருதிவியைப் போலக் கடிநமாக நின்று உண்ட அந்ந பாநாதிகளைக் கடையும். இந்த ஐந்து வாயுக்களையு மல்லாமல், வாந்தி பண்ணுவிக்கின்றது, நாகன் என்றும், இமைத்து விழிப்பிக்கின்றது, கூர்மன் என்றும், குறுகுறுத்துத் தும்முவிக்கின்றது, கிரிகரன் என்றும், கொட்டாவி கொள்ளுவிக்கின்றது, தேவதத்தன் என்றும், வீங்குவிக்கின்றது, தநஞ்சயன் என்றும் வேறே ஐந்து வாயுக்கள் உண்டென்று சிலர் சொல்லுவர். இவ்வைந்தும் பிராணனுடைய, தொழிலானபடியால் வேறல்ல.
,,	15	பின்னும் ஆகாய மாதிய ஐந்து பூதங்களின் இராஜதாம்சத்தில், பூதத்துக் கோரொரு மாத்திரை யெடுத்துத் தனித் தனியே வைக்கப் பட்டவை, வாக்காதி கன்மேந்திரியங்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	15	கள் என்று சொல்லப்படும். இவை களில் ஆகாயத் தினிடமாக வாக்கு வசநிக்கும். வாயுவினிடமாகப் பாணி இடுதல் ஏற்றல் செய்யும். அக்கிநி யினிடமாகப் பாதம் நடக்கும். அப்பு வினிடமாகப் பாயுரு மலசலங்களை வெளியிற் றள்ளும். பிருதிவியினிடமாக உபத்தம் சுகத்தைப் பண்ணும். இவ் வைந்திந்திரியங்களும் தனித் தனியே இருக்கின்றமையால், ஒன்று மற் றொன்றின் தொழிலைச் செய்ய மாட்டாது. வியாநாதி வாயுக்கள் ஐந்து மாத்திரையும், ஒன்றாகக் கூடிய தானமையால், கன்மேந்திரியம் ஐந்தின் வழியினானும் ஐந்து தொழிலை யும் செய்து முடிக்கும். இவ் வாயுக்கள் (5) கன்மேந்திரியங்கள் (5) ஆகிய (10)ம் இராஜதாம்சமானமையால், கிரியா சாதந மாயின.
,,	16	அந்தக் கரணம் (5) ஞானேந் திரியம் (5) வாயுக்கள் (5) கன்மேந் திரியம் (5) ஆகிய (20) தத்துவங் களும், சூட்சும சரீரம் என்று சொல்லப் படும். இச் சூட்சும சரீரத்தை மாயாப் பிரதிவிம்பராகிய ஈசுவரன், அவித்தி யாப் பிரதி விம்பராகிய ஜீவர்கள் அநேக ரானமையால், ஒவ்வொரு வருக்கும், ஒவ்வொரு சரீரமாகக்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	16	சிருஷ்டித் தளித்தான். இப்படிச் சூட்சும சரீர கற்பனை சொல்லப் பட்டது.
,,	17	இனித் தூல பூத உற்பத்தி சொல்லப் படுகிறது. மிஞ்சிய தாம தாம்சமாக இருக்கின்ற ஐந்து பூதங் களையும், ஒவ்வொன்றை இரண்டி ரண்டாகப் பகுத்து, முதற்பாதி ஐந்தையும் ஒவ்வொன்றை நான்கு நான்காகப் பகுத்து இரண்டாம் பாதி ஐந்தில் தன் னம்சத்துடன் கூட்டாமல், மற்றைய நான்கு பூதங்களுடனும், பூதத்துக்கு அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகச் சேர்க்கின்றது பஞ்சீ கரணம் என்று சொல்லப் படும்.
,,	18	இங்ஙனம், பஞ்சீகரிக்கப் பட்ட தூல பூதங்களில், ஆகாயத்தில், பரிச ரூப ரச கந்தமாகிய நான்கு குணங் களும் வியாப்பியமானமையால், அதிரி சியமாம்; நிச குணமாகிய சப்தம் திரிசியமாம். வாயுவில் ரூப ரச கந்த மாகிய மூன்று குணங்களும் வியாப் பியமானமையால் அதிரிசியமாம்; காரண குணமாகிய சப்தமும், நிச குணமாகிய பரிசமும் திரிசியமாம். அக்கினியில் ரச கந்த மாகிய இரண்டு குணங்களும் வியாப்பியமானமையால், அதிரிசியமாம்; காரண குணங்களாகிய

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	18	சப்த பரிசமும், நிச குணமாகிய ரூபமும் திரிசியமாம். அப்புவில் கந்த குணம் வியாப்பியம் ஆனமையால், அதிரிசியமாம்; காரண குணங்களாகிய சப்த பரிச ரூபமும், நிச குணமாகிய ரசமும் திரிசியமாம். பிருதிவியில், காரண குணங்களாகிய சப்த பரிச ரூப ரசமும், நிச குணமாகிய கந்தமும் திரிசியமாம்.
,,	19	சூட்சும பூதங்களினின்றும் சூட்சும சரீரங்கள் தோன்றினாற் போலப், பஞ்சீகரிக்கப்பட்ட தூல பூதங்களினின்றும், ஆறு தத்துவமாய், நால்வகைப் பிறப்பாய், மூவகைச் சாதியாய் இருக்கின்ற தூல சரீரங்கள் தோன்றின. இவற்றுள், ஆறு தத்துவங்களாவன : சருமம், உதிரம், மாம்சம், சநாயு, அஸ்தி, மச்சையாகிய இவைகளாம். நால்வகைப் பிறப்புக்களாவன : சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜ்ஜம் ஆகிய இவைகளாம். மூவகைச் சாதிகளாவன : இகலோக, பரலோக புத்தியைத் தருகின்ற மாநுட சரீரங்கள் உத்தம சாதியாம். பரலோக புத்தியை மறைத்து, இகலோக புத்தியை மாத்திரம் தருகின்ற பசு பக்ஷியாதிய சரீரங்கள், மத்திம சாதியாம். இரு-

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
2	19	வகைப் புத்தியையும் மறைத்திருக்கின்ற மரங்கொடி செடியாதிகள் அதம சாதியாம்.
,,	20	இப்படிப் பிருதிவி தத்துவமாய் இருக்கின்ற பூலோகத்திற்றோற்றுகின்றது போல, அப்பு, அக்கிநி, வாயு, ஆகாயம் என்னப்பட்ட தத்துவங்களாய் நிர னிரையே இருக்கின்ற பிதிர்லோக, தே வ லோ க, யக்ஷ கந்தர்வ லோக, சித்தர் லோகங்களினும், சந்திரன் நட்சத்திரமாகத் தோற்றுகின்ற பிதிர்க்கள், சூரியன் முதலான தேவதைகள், யக்ஷ கந்தருவர்கள், சித்தர்கள் சரீரங்கள் உத்தம சாதியாம். காமதேநு, ஐராவதம், அந்நம், கருடனாதிய சரீரங்கள் மத்திம சாதியாம். கற்பக விருட்சம், பாரிஜாத மாதிய சரீரங்கள் அதம சாதியாம். இப்படிப் பிரகிருதி முதல் தூல சரீரம் ஈறுயுள்ள தத்துவங்களின் தோற்றங்கள் சொல்லப்பட்டன.
3	21	தூல சரீரமே அந்நமய கோசம். சூட்சும சரீரம் மூன்று கோசங்களாயிருக்கும். எங்ஙனமெனின்? பிராண வாயுவுங் கன்மேந்திரியங்களும் கூடிப் பிராணமய கோசம். மநதும் ஞாநேந்திரியங்களும் கூடி மநோமய கோசம். புத்தியும் ஞாநேந்திரியங்களும் கூடி

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
3	21	விஞ்ஞானமய கோசம். காரண சரீரமே ஆநந்தமய கோசம். இப்படிப் பஞ்ச கோசங்கள் சொல்லப்பட்டன.
,,	22	ஆறு தத்துவங்களா யுள்ள தூல சரீரத்தில், இருபது தத்துவங்களா யுள்ள சூட்சும சரீரம் இருக்கின்றது. அஃதெங்ஙன் எனில் (அஃது எவ்விடம் எனின்)? கன்மேந்திரியங்களுள் வாக்கும், ஞானேந் திரியங்களுள் சிங்கு வையும் வாயிலிருக்கும். உதாந வாயு வும், மநதும் கண்டத்திலிருக்கும். பிராண வாயுவும், புத்தியும் இருதயத் தில் இருக்கும். சமாந வாயுவும், சித்தமும் நாபியிலிருக்கும். அபாந வாயுவும், பாயுருவும் குதத்தில இருக்கும். வியாந வாயுவும், துவக் கிந்திரியமும், அகங்காரமும் சர்வாங்க மும் வியாபித்திருக்கும். உச்சியிலே உள்ளமும், கருவிழி நுனியிலே சட்சு விந்திரியமும், காதினுள்ளே சுரோத் திரேந்திரியமும், மூக்கு நுனியிலே கிராணேந்திரியமும், கழுத்துக்கு மேல் தனித்தனியே இருக்கும். கழுத்திற்குக் கீழே கை, கால், குய்யங்களில், பாணி, பாதம், உபத்தம் மூன்றும் தனித் தனியே யிருக்கும். இப்படித் தூல சரீர தத்துவங்கள் ஆறு; அதிற் குடிபுகுந்த சூட்சும சரீர தத்துவங்கள் இருபது; ஆகத் தத்துவங்கள் இருபத்தாறும்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
3	22	பஞ்ச பூதங்களின் காரியங்களான படியினாலே ஒருமைப் பாடாகக் காரிய சரீரமென்று சொல்லப்படும்.
,,	23	அவித்தையிற் பிரதி விம்பனாயுள்ள சிதாபாஸன், சாக்கிரத்தில், இந்த இருபத்தாறு தத்துவங்களுடன் கலந்து நிற்கும்போது விசுவன் என்றும், வியாவகாரிக சீவன் என்றும் சொல்லப் படுவன். சொப்பனத்தில் தூல சரீரத்தை விட்டு அந்தக் கரணத்துடன் கூடி நின்றபோது தைஜஸன் என்றும் பிராதிபாஸிக சீவனென்றும் சொப்பன கற்பிதனென்றும் சொல்லப்படுவன். சுழுத்தியில் காரிய சரீர தத்துவங்கள் இருபத்தாறையும் விட்டுக் காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தி யிருக்கும்போது, பிராஞ்ஞன் என்றும், பாரமார்த்திக சீவனென்றும் சொல்லப் படுவன். இப்படிச் சீவனுக்கு மூன்று சரீரங்களும், மூன்று அவத்தைகளும் சொல்லப்பட்டன.
,,	24	பிரஹ்ம சைதந்நியமும், சாக்கிரத்துக்குச் சாட்சியாய் இருக்கும்போது, சீவாத்மா வெனவும், சொப்பனத்துக்குச் சாட்சியாயிருக்கும் போது, அந்த ராத்மா வெனவும், சுழுத்திக்குச் சாட்சியா யிருக்கும்போது, பரமாத்மா வெனவும், அவத்தாத் திரய சாட்சியா

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
3	24	யிருக்கும்போது, ஞாநாத்மா வெனவும் கூடத்த ரெனவும் சொல்லப்படும்.
,,	25	ஈசுவரனுக்கு மூன்று சரீரங்களும் மூன்றவத்தைகளும் சொல்லப் படுகின்றன. கற்பிதப் பிரபஞ்ச வடிவ மாகத் தோற்றுகின்ற தூல பஞ்சபூதங் களும், அவற்றிற் றோன்றிய மூன்று சாதிகளா யிருக்கின்ற தூல சரீர சமட்டியுங் கூடி ஈசுர தூல சரீர மென்றும், விராட்டென்றும் சொல்லப் படும். இதனுடனே கூடிச் சாக்கிரா வத்தையைப் பொருந்துகின்ற ஈசுரன், வைசுவாநரன் என்றும், இந்த இரு வகைக்கும் அதிட்டாந சைதந்நியம், பிரஹ்மா வென்றும் சொல்லப்படும். சூக்கும பூதங்கள் ஐந்தும், அவற்றிற் றோன்றிய சூக்கும சரீர சமட்டியுங் கூடி ஈசுர சூக்கும சரீர மென்றும், இரணிய கருப்ப மென்றும் சொல்லப்படும். இதனுடனே கூடிச் சொப்பநாவத்தை யைப் பொருந்துகின்ற ஈசுரன், சூத்தி ராத்மா என்றும், இந்த இருவகைக்கும் அதிட்டாந சைதந்நியம் விஷ்ணு என்றும் சொல்லப்படும். இந்தத் தூல சூக்கும மாகிய இரண்டின் வாசனை யுடனே கூடியிருக்கின்ற மாயை, ஈசுர காரண சரீரமென்றும், அவ்வியா கிருதமென்றும் சொல்லப்படும். இத- னுடனே கூடிச் சுழுத்தியவத்தையைப்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
3	25	பொருந்துகின்ற ஈசுரன் அந்தரியாமி என்றும், இந்த இரு வகைக்கு மதிட்டாந சைதந்நியம் உருத்திரன் என்றும் சொல்லப்படும்.
,,	26	சீவன் தன் மூன்றவத்தைகளிலும் தன் மூன்று சரீரங்களாய் இருக்கின்ற (27) தத்துவங்களுடனும். நானென்று கலந்து நிற்பதுபோல, ஈசுரனும், தன் மூன்றவத்தைகளிலும் தன் மூன்று சரீரங்களாயிருக்கின்ற (32) தத்துவங் களுடனும் கலந்து நிற்பன். சீவன் தன் சரீர மாத்திரமே கலந்து நிற்பன. ஈசுரன் தன் சரீரமாகிய சகல சரீரங்க ளோடும், சகல பிரபஞ்சங்களோடும் கலந்து நிற்பன் இந்த இருவகைக்கும் சாட்சியாய் இருக்கின்ற பிரஹ்ம சைதந்நியமும், சகல சரீரங்களினும், சகல பிரபஞ்சங்களிலும் நிறைந்து, அப்பாலும் பத்துத் திக்கையும் அதிக் கிரமித்து எல்லையற்றிருக்கும்.
,,	27	சீவன்றன் தூல சரீர விவகாரத் திற்குக் கூடும் தத்துவங்கள்: தூல சரீர தத்துவங்கள் (6) சூட்சும சரீர தத்துவங்கள் (20), சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரஹ்மம் (5) ஆக தத்துவங்கள் (31). சூட்சும சரீர விவகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள்:

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
3	27	சூட்சும சரீர தத்துவங்கள் (20) சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரஹ்மம் (5) ஆக தத்துவங்கள் (25). காரண சரீர விவகாரத்திற்குக் கூடுந் தத்துவங்கள்: சீவன் ஈசுரன் அவித்தை வித்தை பிரஹ்மம் (5). சீவ விவகாரத்திற்குக் கூடும் தத்துவங்கள்: சீவன் ஈசுரன் பிரஹ்மம் (3). சாட்சி விவகாரத்திற்குள்ள தத்துவம் சாக்ஷி (1).
,,	28	ஈசுரன் தன் தூல சரீர வியவகாரத்திற் கூடும் தத்துவங்கள்: சமட்டி தூல சரீர தத்துவம் (6), சமட்டி சூட்சும சரீர தத்துவம் (20), சமட்டி சீவன் அவித்தை (2), தூல பூதம் (5), ஈசுரன் வித்தை பிரஹ்மம் (3), ஆக (36). சூட்சும சரீர வியவகாரத்திற் கூடும் தத்துவங்கள்: சமட்டி சூட்சும சரீர தத்துவங்கள் (20), சமட்டி சீவன் அவித்தை (2), சூட்சும பூதம் (5), ஈசுரன் வித்தை பிரஹ்மம்(3), ஆக (30). காரண சரீர வியவகாரத்திற் கூடுந் தத்துவங்கள்: ஈசுரன் வித்தை பிரஹ்மம் (3). ஈசுர வியவகாரத்திற் கூடுந் தத்துவங்கள்: ஈசுரன் பிரஹ்மம் (2). பிரஹ்ம வியவகாரத்துக்குள்ள தத்துவம் பிரஹ்மம் (1).

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
3	29	இந்திரிய வியவகாரத்திற் கூடுந் தத்துவங்கள்: இந்திரியம் (1), தூல சரீர தத்துவங்கள் (6), அந்தக் கரணம் (5), வாயுக்கள் (5), சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரஹ்மம் (5), ஆக (22) மநோராச்சிய வியவ காரத்திற் கூடுந் தத்துவங்கள்: அந்தக் கரணம் (5), சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரஹ்மம் (5) ஆக (10). இப்படித் தத்துவங்களின் நிலை சொல்லப்பட்டது.
4	30	இனி, தத்துவங்கள் ஒடுங்குகின்ற வழி சொல்லுகின்றோம். சகல சீவர் களிடத்திலுமிருக்கின்ற தூல சரீரங் களனைத்தும், தமக்காதாரமான தூல பூதங்களில் மடிந்து, பூத மாத்திரமாக ஒடுங்கும். இந்தத் தூல பூதங்களும், பஞ்சீகரணம் விட்டுத், தன் மாத்திரை களான தாமதகுண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவலம் இரணிய கருப்பாவத்தை யென்று சொல்லப் படும்.
”	31	சூட்சும சரீர தத்துவங்கள் (20)ம் கட்டு விட்டுப் பூதங்களின் சாத்துவீக குணமும், இராசத குணமுமாக ஒடுங்கும். அஃதெங்ஙன மெனின், சகல பிராணிகளிடத்திலுமிருக்கின்ற

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
4	31	அகங்காரமும், ஆக்கிராணமும், உதாந வாயுவும், உபத்தமும் பிருதிவியில் ஒடுங்கும். சித்தமும், சிங்நுவையும், சமாநனும், பாயுருவும், அப்புவில் ஒடுங்கும். புத்தியும், சக்ஷுவும், அபாநனும், பாதமும் அக்கினியில் ஒடுங்கும். மநதும், தொக்கும், பிராணனும், பாணியும் வாயுவில் ஒடுங்கும். உள்ளமும், சுரோத்திரமும், வியாநனும், வாக்கும் ஆகாயத்தில் ஒடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும்.
,,	32	இந்தச் சூட்சும பூதங்களும், பிருதிவி அப்புவில் கரைந் தொடுங் கும் அப்புவும் அக்கிநியிற் சுவறி ஒடுங்கும். அக்கிநியும் விளக்குப் போல வாயுவில் அணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாயத்தில் ஒய்ந்து ஒடுங்கும். ஆகாயமும், விக்ஷேப சத்தியில் ஒடுங்கும். ஆவரண சத்தியும், விக்ஷேப சத்தியும் மூலப் பிரகிருதியின் தமோ குண மாத்திரமாய் ஆலமரம் ஆல விதையில் ஒடுங்கிறாற் போலப், பின்னுமொரு சிருட்டிக்கு வித்தாக, அவித்தையினும், மாயையினும் ஒடுங்கும்.
,,	33	இந்த மாயையும், அவித்தையும், அதி நுண்மையான மூலப் பிரகிருதி யென்னும் விந்து தத்துவமாக ஒடுங்கும்.

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
4	33	அவ் விந்து தத்துவமும், பாம்பு பழுதை மாத்திரமாக ஒடுங்கியது போலத் தனக் கதிட்டாந மான பிரஹ்ம சைதந்நிய மாத்திரமாக ஒடுங்கும்.
,,	34	இப்படித் தோற்றி யொடுங்கிய தத்துவங்கள் (35). அவையாவன :- பூதங்கள் (5), தூல சரீர தத்துவங்கள் (6), சூட்சும சரீர தத்துவங்கள் (20), காரண சரீரமான மாயை அவித்தை (2), அவைகளிற் பிரதிவிம்பமாயுள்ள, ஈசுரன், சீவன் (2), ஆகிய இவைகளாம்.
,,	35	இப்படித் தோற்றி யொடுங்கிய பொய்ப் பொருள்கள் யாவும், மெய்ப் பொரு ளொன்ருகவே யுளதெனவும்; அதுவே, சுவபாவ சித்தமாகவும், நிசமாகவும் இருக்கின்ற தன் வடிவமெனவும்; அறிந்தவனே பிரஹ்ம ஞாநியாகிய சீவன் முத்தனும். இங்ஙனம் தத்துவங்களின் ஒடுக்கம் சொல்லப்பட்டது.
5	36	தத்துவம் (36)ல், பூதம் (5), மாயை (1), மாயாப் பிரதிவிம்பரான ஈசுவரன் (1), பிரஹ்மம் (1), ஆகிய இந்த எட்டும் சகல பிராணிகட்கும் சமுதாயமாக அநுபவிக்கப்படும். எங்ஙனமெனின்? சகலர்க்கும் பிருதிவி

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
5	36	இறக்கில் ஆதாரமில்லை. அப்பு இறக்கில் குளிர்ச்சி யில்லை. தேயு இறக்கில் பாகமில்லை, வாயு இறக்கில் பிராணன் இயக்கமில்லை. ஆகாய மிறக்கில் அவகாசமில்லை. மாயையும் மாயாப் பிரதி விம்பருமிறக்கில் சகல சமயங்கட்கும் தெய்வமில்லை. பிரஹ்ம மில்லையாயின் சகலர்க்கும் அறிவில்லை. ஆதலால், இந்த எட்டும் எல்லோருக்கும் சமுதாயமாம்.
,,	37	மற்றைய (28) தத்துவங்களும், அவனவனுக்குப் *பிருதக்காக அனுபவிக்கப்படும். அஃதெதனை லெனின், ஒருவனுக்குத் தூல சரீரம் இறக்கில் எல்லோருக்கும் இறவாத படியினுனும் சூட்சும சரீரத்தில், ஒருவனுக்கு அங்க §வைகல்யம் வந்தால், எல்லோருக்கும் வராதபடியினுனும், முத்தராயிருந்த சுகர் வாமதேவ ராதியர்கட்கு, அவித்தையும், சீவனும் இறந்து போயிருக்க மற்றையோர்க் கெல்லாம் இறவாத படியினலும், இவ்விருபத் தெட்டுத் தத்துவங்களும், பிருதக் கென்பதிற் சந்தேகமில்லை.

* பிருதக்கு - வேறு

§ வைகல்யம் (விகலம்) - குறைவு

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
5	38	இத்த த்துவங்கள் முப்பத்தாறில், எப்போதும் தாஞகவே காணப்படுகிற தத்துவம் (1). எப்போதும் தனக் கந்நியமாகவே காணப்படுகிற தத்து வங்கள் (7). தாஞகவும், தனக் கந்நியமாகவும் அநுபவிக்கப்படுகிற தத்துவங்கள் (28).
,,	39	அஃதெங்ஙனமெனின், அவத்தாத் திரய சாட்சியாகிய பிரஹ்ம சைதந் நியம், எல்லா அவத்தைகளிலும் தாஞகவே விளங்குகையினுலும், மற்றைத் தத்துவங்கள் போலத் தனக்கு அந்நியமாகக் காணப்படாத படியினுலும், பிரஹ்ம சைதந்நியம் ஒன்றுமே தாஞகக் காணப்படுகிறது.
,,	40	பஞ்ச பூதம், மாயை, மாயாப் பிரதி விம்பராகிய ஏழும் தன் தன் தொழிலான பொறுத்தல், பிண்டீ கரித்தல், தகித்தல், உலர்த்தல், இடங் கொடுத்தல், தசாவதாரம், பஞ்ச கிருத்தியங்கள் ஒரு காலத்தினும் தன் தொழில்களாகக் காணப்படாமையால், தனக்கந்நியங்களே யல்லாமற் ருஞக மாட்டா,
,,	41	மற்றை (28) தத்துவங்களுள், நான் பிராமண ஞதிய வருணத்தன்; பிரமசரிய மாதிய ஆச்சிரமி; நான்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
5	41	ஆண், பெண், கருவல், சிவலை, கட்டையன், நெட்டையன், நான் பருத்தேன் இளைத்தேன் என்று, தானாக வழங்கப்படுகிற தூல சரீரம் ஆறு தத்துவங்களும், மற்றொரு வேளையில் தனக்குப் புறம்பு பட்டு, "என் மாடு, என் கன்று" என்றாற் போல, என் சரீரம் பருத்தது, இளைத்தது, நரைத்தது, என் சரீரம் பிறந்தித்தனை நாளாயிற்று என்று வேறாக வழங்கப் படுகின்றமையினாலும்; நான் கண்டேன், கேட்டேன், பரிசித்தேன், வசனித்தேன், கொடுத்தேன், நடந்தேன், சங்கற்பித்தேன், நிச்சயித்தேன், இந்தப் பஞ்சத்திற்குச் சீவித்தேன் என்று, தானாக வழங்கப் படுகிற சூட்சும சரீர தத்துவம் (20)ம், மற்றொரு வேளையில் தனக்குப்புறம்பு பட்டு "என் உடைமை, என் வீடு" என்றாற் போல, என் கண், என் காது, என் தொக்கு, என் வாக்கு, என் கை, என் கால், என் மநம், என் புத்தி, என் பிராணன் என்று வேறாக வழங்கப் படுகின்றமையினாலும்; நானறியேன், நானறிவேன், என்று தானாக வழங்கப் படுகிற அஞ்ஞானமும் சீவனும், மற்றொரு வேளையில் தனக்குப் புறம்புபட்டு என் அஞ்ஞாநம், என் சீவன் என்று வேறாக வழங்கப் படுகின்றமையினாலும்; இந்த இருபத்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
5	41	தெட்டுத் தத்துவங்களும் தாஞகவும் தனக்கந்நியமாகவும் அநுபவிக்கப் படுகின்றனவாம்.
,,	42	சங்கை:- இந்த (28) தத்துவங் களும் தாஞனல் சாக்ஷியைப் போல, ஒரு தன்மையாகத் தோற்ற வேண்டுமேயல்லாமல், பஞ்ச பூதங் களைப் போலத் தனக் கந்நியமாகத் தோற்ற நியாயமில்லை. தனக்கந்நிய மாஞல் எப்போதும் புறம்பாகத் தோற்ற வேண்டுமேயல்லாமல், தாஞக வழங்கற்கு நியாயமில்லை. தானுமாய்த் தனக்கந்நியமுமாய் இருக்குமெனல், இருட்டாதித்தியன் என்றூற் போலும், வெள்ளாள தீக்ஷிதன் என்றூற் போலும் விருத்தமாம் எனின்?
,,	43	உத்தரம்:- பரமார்த்த மாகத் தானென்கின்ற தொரு வகையும், அத்தியாசத்திஞலே தானென்கின்ற தொரு வகையும் ஆக இருவகையும் உண்டு சாக்ஷிசைதந்யத்தைத் தானென்கின்றது, பரமார்த்த மல்லா மல், உபசாரமல்ல. தனக்கந்நிய மாகிய இருபத்தெட்டையும், தானென் கின்றது. கட்டையைக் கள்ளனென் றூற் போலும், பழுதையைப் பாம் பென்றூற் போலும், புத்திர தாராதி களைத் தானென்றூற் போலும்

நிரூபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
5	43	அத்தியாசமேயன்றி, உண்மையல்லாமையால் விருத்தமன்றாம்.
,,	44	ஆகையால், அஞ்ஞாந காலந் தொடங்கி தானல்லவென்று காணப்பட்ட தத்துவங்கள் (7). இப்படிப்பட்ட விவேகம் உண்டாகிய பின்பு, தானல்ல என்று காணப்பட்ட தத்துவங்கள் (28). ஆகிய இந்த (35) தத்துவங்களையும், அததற்குள்ள, குணங்குறிகளுடனே கூட்டிக் காண்கின்ற அறிவானது, கடத்தைப் பார்க்கின்றவன் கடத்துக்குப் புறம்பாகவே யிருந்து கடத்தைப் பார்க்கின்றது போல, அவைகட் கந்நியமாகவே இருந்து, அவைகளை அறிகிறதென்றும்; முப்பத்தாறாந் தத்துவமாகிய அதுவே தானென்றும்; தானே பரமசிவம் என்றும் கலக்கமறத் தெளிந்தவனே சிவதரிசநமுடைய சீவன் முத்தனாம்.
,,	45	இப்படிப் பிரஹ்மமே தாமென்றும், மற்றைய (35) தத்துவங்களும் தமக்கந்நிய மென்றும், பிரித்தறியாத அவிவேகிகள், அகங்காரக் கிரந்தியினாலே, புத்திர தாராதிகள் தபிக்கின்றதைத் தாம் தபிக்கின்றோம் என்கின்ற மூடகரம் போல, இந்த இருபத்தெட்டினுடைய தொழில்களையும், தந்தொழில்கள் என்று மயங்குகின்றமையால், இந்த இருபத்

நிருபக எண்	நூல் பிரிவு எண்	நூல்
5	45	தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவ மாதிய கன்மங்களிற் கட்டுப் பட்டு, அந்தக் கன்மங்களின் படியே, சநந மரணாதி சம்சாரங்களில் அடிபடுகிறோமென்று மயங்குவர்.
..	46	பிரஹ்ம சைதந்நியமே தானென்றும், மற்றைய (35) தத்துவங்களும் தானல்ல வென்றும், தெளிந்த விவேகியானவன், அகங்காரக் கிரந்தியற்ற படியினாலே, இந்த இருபத்தெட்டின் தொழில்களையும், நான் செய்யவில்லையென்றும், இந்த இருபத் தெட்டும் புசிக்கின்றதை, நான் புசிக்கவில்லையென்றும், திடப்படத்தேறி, மயக்கமற்றிருக்கின்றமையால், இந்த இருபத்தெட்டினாலும், ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கன்ம சம்பந்தமில்லாமையால், சநந மரணாதி சம்சாரமில்லாமல், முத்தனாகிப் பிரஹ்ம மாத்திரமாகவே யிருப்பன்.
6	47	இவனைச் சீவன் முத்தன் என்றும், திடப் பிரஞ்ஞன் என்றும், பகவற் பக்தன் என்றும், குணாதீதனென்றும், பிராமணன் என்றும். அதிவருணாச்சிரமி யென்றும், வாசிட்டம் முதலிய சாத்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத்தத்துவங்களைவிசாரம் பண்ணி மோக்ஷம் அடையக்கடவர்.

நாநா சீவ வாதக் கட்டளை மூலம் முற்றிற்று.